

முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டி கிராமத்தைச் சேர்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் (18.07.2024) அவர்களது குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## அண்ணா – கலைஞர் இணைந்த ஓருருவாய்

# நல்லாட்சி நடத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## காஞ்சிபுரத்தில் நடந்த 'தமிழ்நாடு நாள் விழா'வில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!

காஞ்சிபுரம், ஜூலை 20-

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் இணைந்த ஒருருவாய் திகழ்ந்து நல்லாட்சி நடத்தி வருகிறார் என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



காஞ்சிபுரம் ஏ.கே.ஜி திருமண மாளிகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் நடைபெற்ற "தமிழ்நாடு நாள்" விழாவில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் தமிழன்னை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படங் களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மேலும் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஆண்டுதோறும் ஜூலை 18 ஆம் நாளினை தமிழ்நாடு நாள் விழாவாக கொண்டாடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். அதனடிப்படையில் கடந்த 2 ஆண்டு காலமாக இவ்விழா சென்னையில் நடத்தப்பட்டு, 3 ஆம் ஆண்டாக நம்முடைய காஞ்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த மண்ணில் நடத்த வேண்டும் என்கின்ற வகையில் முதலமைச்சரின் வழிக்காட்டுதலோடு காஞ்சியில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாகாணம் என்று இருந்த நம்முடைய மாநிலத்தின் பெயரை மொழி வாரி மாநிலமாக பிரிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா ஒருமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைக்கு (18.7.1967) அறிவித்தது தான் ஜூலை 18 ஆம் நாள். அது வெளிப்படாமல் இருக்கின்றது என்பதை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் எங்களது துறைக்கு உத்தரவிட்டு இன்றைக்கு தமிழ்வளர்ச்சி துறை யும், செய்தித் துறையும் இணைந்து இன்றைய தினத்தை தமிழ்நாடு நாள் விழாவாக மூன்றாம் ஆண்டாக கொண்டாடி வருகிறோம்.

தமிழ்நாட்டிற்கென்று பல்வேறு சிறப்புக்களை நாம் பெற்றிருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறுத் திட்டங்களையும், அதே போல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தினார்கள். நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும், மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்கிற வகையில் முதலமைச்சர் பல்வேறுத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இதே மண்ணில் நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் மகளிருக்கான மாத உரிமைத் தொகை ரூ.1,000/- என்னும் திட்டத்தை இங்கு தான் தொடங்கி வைத்தார் என்பது நாம் எல்லோரும் அறிவோம்.

இதுபோல், பல்வேறு திட்டங்கள். அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா பயணம், அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து கல்லூரிகளுக்குச் செல்லும் உங்களைப் போன்ற மாணவர்களுக்கு, அந்த கல்லூரிகளில் தடையின்றி உயர் கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக மகளிருக்கானப் புதுமைப்பெண் திட்டம், இந்த ஆண்டு முதல் நம்முடைய மாணவர்களுக்கும் வழங்குகின்ற வகையில் தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்றத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகின்றார்.

விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும், அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறுத் திட்டங் களை சிறப்பாக செயல்படுத்திவருவதால் தான், தமிழ்நாடு மேலும், மேலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்த விழா நடைபெறுவது பேரறிஞர் அண்ணா பிறந்த மண் ஆகும். பேரறிஞர் அண்ணா தனது பேச்சால், எழுத்தால் இந்த தமிழ்நாட்டின் சூழலையே மாற்றிக்காட்டியவர் ஆவார். அவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதே போல், இருவரையும் சேர்ந்து, ஒரே உருவமாக விளங்கும் முதலமைச்சர் அவர்களும் நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார். அந்த ஆட்சிக்கு நீங்கள் அனைவரும் தொடர்ந்து உறுதுணையாக இருக்க வேண்டும்.

இங்கு சிறப்பான கருத்தரங்கம் நடக்கிறது. வந்திருக்கும் அனைவரும் முக்கியமாக, மாணவச் செல்வங்கள் இந்த கருத்தரங்கத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகளை கேட்டறிந்து, தெளிவு பெற வேண்டும். நீங்கள் எல்லோரும் தான் தமிழ்நாட்டின் எதிர்காலம். இந்நேரத்தில், உங்கள் அனைவரை யும் வருக, வருக என்று வரவேற்று, வருகைத் தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி, வாழ்க தமிழ்நாடு என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

### காசோலை – பாராட்டு சான்றிதழ்

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் கோ. தீபஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.50,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருவள்ளூர் மாவட்டம் ம. ஜெயஜனனி என்ற மாணவிக்கு ரூ.30,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டம் மு.வீரமணி கண்டன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற திருவாரூர் மாவட்டம் ச.கௌ.பாவேஷ் பிரசன்னா என்ற மாணவனுக்கு ரூ.50,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டம் அ.அப்துல் ஹக்கீம் என்ற மாணவனுக்கு ரூ.30,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் நா.ரிஸ்வானா பர்வின் என்ற மாணவிக்கு ரூ.20,000/-ம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்கள்.

இவ்விழாவினையொட்டி ஆழி.செந்தில்நாதன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் "தமிழ்நாடு வாழ்வும் வரலாறும்" என்ற தலைப்பில் முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும், "சென்னை மாகாணமும் செயற்கரிய போராட்டங்களும்" என்ற தலைப்பில் செல்வன் சிவ.சதீஷ் அவர்களும், "சென்னை மீட்பும் வரலாறும்" என்ற தலைப்பில் திருமதி. அனு கிரகா அவர்களும், "திராவிட இயக்கத் தலைவர்களும் நவீன தமிழ்நாடும்" என்ற தலைப்பில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், "தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்ட வரலாறு" என்ற தலைப்பில் செல்வன் மா. மதன் குமார் அவர்களும் கருத்துரையாற்றினார்கள்.

இவ்விழாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பி னர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜா ராமன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், மாவட்ட வருவாய் அலுவலர் செ. வெங்கடேஷ், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் இயக்குநர் திருமதி க.பவானி உள்பட அரசு அலுவலர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் - சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி.. அறிக்கை!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட/ மாநகர அமைப்பாளர்கள் மற்றும் சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (21.07.2024) காலை 9.00 மணி அளவில் சென்னை, எழும்பூரில் உள்ள "ஓட்டல் ரமடா"வில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கவுரை ஆற்றிட, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றிட, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நிறைவுரையாற்றிட உள்ளனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட/ மாநகர அமைப்பாளர்கள் மற்றும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் – தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.7.2024

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை



ராணிப்பேட்டை மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.ஆர். விமல் மூத்த மகன் வி. திருமூர்த்தி.ப.பாமினி திருமண வரவேற்பு நிகழ்ச்சி அரக்கோணம் மங்களம் திருமண மண்டபத்தில் நகர துணை செயலாளர் எ.அன்புலாரன்ஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு கைத்தறி(ம) துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி, பொதுக்குழு உறுப்பினர் மு.கண்ணையன், நகர மன்ற துணை தலைவர் கலாவதிஅன்புலாரன்ஸ், மாவட்ட பிரதிநிதிகள் வி.எஸ்.ஆர்.ரவி, பூக்கடை என்.அரி, நகர பொருளாளர் ரமேஷ், பி.மூர்த்தி, வழக்கறிஞர் என்.ராமமூர்த்தி, இரா.லோகபிராமன், தினேஷ்தேவராஜ், வி.மோகன், அருண்லாரன்ஸ், பி.பிரமிளா, A.தினேஷ், A.B.M.சரவணன், ஜி.செங்கல்வராயன், ஆர்.மகேஸ்வரி, பி.பாலாஜி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2024) ஜூன் 2024ஆம் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை) மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் கடும் மழை – மீட்புப் பணிகளுக்கு

# தயார் நிலையில் மாநில பேரிடர் மீட்புப் படையினர்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

நீலகிரி, ஜூலை 20-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட இத்தலார் உள்ளிட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (18.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்தி ரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்த வண்ணம் உள்ளது. இத்தலார் பகுதியில் நேற்றைய முன் தினம் மற்றும் நேற்றைய தினம் ஆகிய இரண்டு நாட்கள் அதிகளவில் மழை பெய்ததால் தடுப்புச்சுவர் இடிந்து, அந்த மண் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. ஆகவே, வருவாய்த்துறையினருடன் இணைந்து இப்பகுதிக்கு வருகை தந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதி வாழ் மக்கள் தடுப்புச்சுவர் கட்டித்தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டுக்குள் தடுப்புச்சுவர் கட்டித் தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகம் பருவமழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள வட்டார அளவில் தமிழ்நாடு மாநில பேரிடர் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மாநில பேரிடர் மீட்பு படையினரை பொறுத்தவரை குந்தா பகுதியில் 10 நபர்களும், கூடலூர் பகுதியில் 10 நபர்களும், பந்தலூர் பகுதியில் 10 நபர்களும் அங்கேயே தங்க வைக்கப்பட்டு, தயார் நிலையில் இருந்து, மழை மற்றும் காற்றின் காரணமாக சாலையில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு எவ்வித சிரமமமின்றி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முன்னேற்பாடு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய தேவையில்லை.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், குந்தா வட்டாட்சியர் திருமதி.கலைச்செல்வி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் உமாசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், இத்தலூர் ஊராட்சி தலைவர் பந்தையன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

# தஞ்சை கூத்தரசனின் தம்பி மெ.மணியின் மணிவிழா!

## சென்னையில் நாளை மாலை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 20-

தி.மு.க. தலைமை இலக்கிய அணியின் புரவலர் தஞ்சை.கூத்தரசனின் தம்பி மெ.மணி - ம.சாந்தி தம்பதியரின் (61வது ஆண்டு பிறந்த நாள் விழா) மணிவிழா நாளை (21.7.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை புரசைவாக்கம் அருகிலுள்ள பெருமாள் பேட்டை இராட்லர் தெருவில் (அவதானம் பாப்பையர் சாலை டவ்டன் மணிகூண்டு ஆகியவற்றின் இடையில் உள்ள தெரு) அமைந்துள்ள எஸ். ஆர்.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தலைமையேற்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு நடத்தி வைத்து வாழ்த்துரையாற்றுவார்கள் மற்றும் டி.கே.எஸ். இளங்கோவன், மாம்பலம், ஆ.சந்திர சேகர், அரிமா நா.சந்திரபாபு ஆகியோரும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகளும் வாழ்த்திப் பேசுகின்றனர்.


### பெருநகர சென்னை மாநகராட்சி
### பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/ 2728 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**Relaying of BT road at Swamy Sivanandha Salai & Island Ground in Zone - 5 & 9**

பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் **ரூ.135.00 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 30.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 31.07.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2444 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**




திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகரம், சக்கரகுப்பம் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்துகொண்டு கட்டிட பணியினை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் ம.அன்பழகன், நகராட்சி ஆணையர் பிரான்சிஸ்சேவியர், நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், நகர மன்ற துணைத்தலைவர் இந்திரா பெரியார்தாசன், நகர மன்ற உறுப்பினர்கள் இ.சுமதிஇனியன், ச.பிரசாத், நகர பொருளாளர் த.இனியன், வார்டு செயலாளர் வி.சி. சஞ்சீவி வார்டு பிரதிநிதிகள் தண்டபாணி, விமல், வி.கார்த்திக், கேசவன், பட்டாபிராமன், கண்ணதாசன், சத்தியநாதன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சிவா, நகராட்சி நிர்வாகிகள் சங்கர், ஸ்டாலின் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.அதன்படி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் இனியன் ஏற்பாட்டில் சமாதானபுரம் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டிருந்த புதிய கொடி கம்பத்தில் கழக கொடியேற்று நிகழ்வு பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை தலைமையில் மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்வில் அலிஃப் மீரான்,மாயா,செல்வம், மைக்கேல் ராஜேஷ்,பீரப்பா, ஸ்டார் முருகன்,ஷெட்டி,சுப்ரித் சுப்பிரமணியன்,அந்தோணிராஜ் அயூப்கான்,கோபாலகிருஷ்ணன் வினோத்,சங்கர்,மைக் மணி, பத்மா,சௌந்தரம்,மேரி உலகராஜ்,பிந்து செய்யது,ஆனி, நர்மதா திலக்,சித்ரா பௌர்ணமி, சங்கர் கணேஷ்,மஸ்தான், சங்கர்,உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.